சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 46 | 05-04-2012

1

## 29-03-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

**தலைப்பு : அரபு நாடுகளில் நடக்கும் எழுச்சிகளின் பின்னணிகள்**

**தொடக்கவுரையாடல் : A. M. M. நிசார்டீன்**

துனீசியாவில் தொடங்கி எகிப்து, பஹ்ரெய்ன், லிபியா, சிரியா என்று தொடர்ச்சியாகப் பல மக்கள் எழுச்சிகள் அரபு நாடுகளில் இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மையுடையதாக இருக்கின்றன. சில எழுச்சிகள் ஆயுதம் தாங்கியவையாகவும் சில எழுச்சிகள் அப்படியல்லாமலும் அமைகின்றன.

இவ்வாறான எழுச்சிகள் நிகழும் நாடுகளில் சில ஒத்த தன்மைகள் காணப்படுகின்றன. அந்நாட்டின் ஆட்சியாளர்கள் பரம்பரை பரம்பரையாக அல்லது பல தசாபதங்களாக அந்நாடுகளை ஆண்டுவருபவர்களாக இருக்கிறார்கள். அவ்வாட்சியாளர்கள் மக்கள் மீது பல்வேறு வகையான அடக்குமுறைகளைப் பிரயோகிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

வெவ்வேறு விதமான அரசியற் சூழல்கள் இந்நாடுகளில் மக்கள் எழுச்சிகளைத் தூண்டியவையாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக துனீசியாவில் வேலையில்லாத பட்டதாரியான ஒரு இளைஞன் பதையோரம் மரக்கறி வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது காவல்துறையினரால் தக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்விளைஞன் தீக்குளித்துத் தற்கொலை செய்துகொண்டான். இதனைத்தொடர்ந்து சிறு பொறியாக ஆரம்பித்த போராட்டம் துனீசியாவில் ஆட்சி மாற்றம் வரைக்கும் கொண்டு சென்றது. எகிப்தில் காவல் துறையினரால் இளைஞனொருவன் மீது செய்யப்பட்ட மிக மோசமான தாக்குதல் வெளிவந்ததைத்தொடர்ந்து மாபெரும் மக்கள் எழுச்சி உருவானது.

இம்மக்கள் எழுச்சிகள் உருவாவதற்கான உடனடிக் காரணங்களாக மேற்கண்ட சம்பவங்கள் அமைந்த போதும் மக்கள் எழுச்சிக்கான கொதிநிலை அங்கே ஏற்கனவே ஏற்பட்டிருந்தது.

மக்கள் எழுச்சிகள் உருவாக வளர்ச்சியடைந்த ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியாக மாறுகிற நிலையில் அமெரிக்கா அம்மக்கள் எழுச்சிகளை ஒவ்வொரு விதமாகக் கையகப்படுத்திக்கொண்டது.

இதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனக்குச் சாதகமான ஆட்சியாளர்கள் உள்ள நாடுகளிடத்தும் தனக்குச்சாதகமற்ற ஆட்சியாளர்கள் இருந்த நாடுகளிடத்தும் வெவ்வேறு விதமான நிலைப்பாடுகளை எடுத்தது.

தனக்குச்சாதகமான ஆட்சியாளர்கள் இருந்த துனீசியா எகிப்து ஆகிய நாடுகளில் கண்துடைப்பான ஓர் ஆட்சிமாற்றத்தினூடாக, தொடர்ந்தும் தனக்குச் சாதகமான நிலையையே ஏற்படுத்திக்கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் அவ்வாட்சி மாற்றத்தினூடாக மக்கள் எழுச்சிகளை அர்த்தமிழக்கவும் செய்தது. அதேவேளை லிபியா சிரியா போன்ற நாடுகளில் மக்கள் எழுச்சிகளை மிகத்தொடக்ககட்டத்திலேயே கைவசப்படுத்திக்கொண்டு ஆயுதக்குழுக்களை ஊடுருவச்செய்து மாபெரும் உள்நாட்டுப் போர்களைத்துண்டிவிட்டது. இதில் லிபியாவில் ஆட்சியாளர்களைக் கொன்றொழித்தும் நேட்டோவைக்கொண்டு தாக்குதல் நடத்தியும் தனது நலன்களை நிலை நிறுத்திக்கொண்டது. இவ்வாறாக தனது சார்பு நிலைக்கும் நலன்களுக்கும் ஏற்ப ஏகாதிபத்தியம் தெளிவான இரட்டை நிலைப்பாட்டினை எடுத்துக்கொண்டது.

ஒருகாலத்தில் ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனுக்கெதிராகப் பயன்படுத்தவென அமெரிக்காவால் உருவாக்கப்பட்டவையே தாலிபான் போன்ற அடிப்படைவாத இயக்கங்களாகும். பிற்பட்ட காலங்களில் அவ்வியக்கங்களை அமெரிக்காவே பயங்கரவாத இயக்கங்களாக அறிவித்தது. தாலிபான் அல்-கொய்தா போன்ற இயக்கங்களைக்கூட இவ் அரபு வசந்தத்தின் போது அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது. லிபியாவில் இவ்வாறான பல்வேறு அடிப்படைவாதக் குழுக்களை அமெரிக்கா லிபிய அரசுக்கெதிராக ஏவி விட்டது. இதில் அல் கொய்தாவின் அமைப்புகளும் கூட அடக்கம்.

பொதுப்போக்கு ஊடகங்கள், குறிப்பாக அமெரிக்கச்சார்பு மேற்கத்தைய ஊடகங்களும் அமெரிக்க எதிர்ப்புப்போல் பாவனை செய்துகொள்ளும் எண்ணெய் முதலாளிகளது சார்பு நிலையில் இருக்கும் அல் ஜசீரா போன்ற ஊடகங்களும் திட்டமிட்டே இவ்வெழுச்சிகள் தொடர்பான பொய்களையும் மாயைகளையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தின.

மிகுதி அடுத்த பக்கம்

## அடுத்து வரும் தலைப்புக்கள்

**தற்காலக் கவிதைகளில் படிமங்களும் குறியீடுகளும்**
சி. சிவசேகரம் | 05-04-2012



கைலாசபதி

**க.கைலாசபதி (ஏப்ரல் 5, 1933 - டிசம்பர் 6, 1982) இலங்கையைச் சேர்ந்த ஒரு தமிழ் இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர்.**

ஈழத்துத் தமிழ் இலக்கியத் துறைக்கு இவர் ஆற்றிய பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையிலே இவராற்றிய பணி ஈழத்துக்கு மட்டுமன்றித் தமிழுலகம் முழுவதற்குமே முன்னோடியாகக் கருதப்படுகின்றது. இடதுசாரிச் சிந்தனைப் போக்குக் கொண்ட இவர், அக்காலத்தில் ஈழத்து இலக்கிய உலகில் பெரும் தாக்கம் கொண்டிருந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்.
இவர் பல நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவர் கலாநிதிப் பட்டத்துக்காகச் செய்த ஆய்வும் நூலாக வெளியிடப்பட்டது. இவரது ஆக்கங்கள், தமிழ் இலக்கியத் துறையை மட்டுமன்றி, சமயம், பண்பாடு, சமுதாயம், அரசியல் போன்ற பல துறைகளையும் சார்ந்திருந்தது. 1982ல், "ஈழத்துத் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு மற்றும் இன உணர்வுகள்" என்னும் தலைப்பில் இவராற்றிய, புனிதவதி திருச்செல்வம் நினைவுப் பேருரை, ஈழத்தமிழர்களுக்கான ஒரு முக்கிய பங்களிப்பாகும். "அடியும் முடியும்", "பண்டைத் தமிழர் வாழ்வும் வளமும்", "தமிழ் நாவல் இலக்கியம்", "இலக்கியச் சிந்தனைகள்" என்பனவும் அவரியற்றிய நூல்களிற் சில.

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## அரபு நாடுகளில் நடக்கும் எழுச்சிகளின் பின்னணிகள்

முன்பக்கத் தொடர்ச்சி...

தற்போது ஊடகங்களுக்கு ஒளிபரப்பவெனத் தயாரிக்கப்படும் சிரியாவின் போர்க்காட்சிகளை புகழ்பெற்ற ஹொலிவூட் இயக்குனரொருவரைக்கொண்டே அமெரிக்கா தயாரிக்கிறது. இத்தகைய காட்சிகள் மறுபடி மறுபடி தொடர்ச்சியாக ஒளிபரப்பப்படுகின்றன.

போர் என்பதே அவலம் என்பது உண்மையாக இருக்க, போர் பற்றிய செய்திகளின் பின்னாலுள்ள அவலங்களை மறைத்து அதனை விறுவிறுப்பான இரசனைக்குரிய செய்திகளாக மாற்றி மக்களிடம் விற்பனை செய்வதை இவ்வூடகங்கள் கச்சிதமாகச் செய்து வருகின்றன.

லிபியாவில் கடாபியை மிகப்பெரிய வில்லனாகச் சித்திரிக்க இவ்வூடகங்கள் எடுத்த முயற்சி நாம் அனைவரும் அறிந்த ஒன்று. மக்கள் கிளர்ச்சி என்று இவ்வூடகங்களால் மறுபடி மறுபடி பிரசாரம் செய்யப்பட்ட லிபியாவின் உள்நாட்டுப்போரில் அமெரிக்க விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மிகத்தாராளமாக போராளிகளால் பயன்படுத்தப்பட்டன. லிபிய உள்நாட்டுக் கிளர்ச்சியாளர்களால் லிபியாவின் சிறுபான்மை இன மக்கள் கொடூரமாகக்கொல்லப்பட்டதுபற்றியோ தொடர்ச்சியாகத் தாக்குதலுக்குள்ளாவதுபற்றியோ இவ்வூடகங்கள் வெளியில் சொல்ல முயலவில்லை.

அரபு நாடுகளில் மட்டுமல்ல மற்றைய நாடுகளிலும் தமது நலன்களைக்காத்துக்கொள்ள இஸ்லாமிய அடிப்படைவாதக்குழுக்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஊக்குவிக்கிறது, இதில் பல நகர்வுகளை சவூதி அரேபியாவினூடாகச் செய்துவருகிறது.

இலங்கையிலும் இனங்களிடையேயான முறுகல் நிலையை ஏற்படுத்தக்கூடிய பல செயற்பாடுகளை முஸ்லிம் மக்களிடையே ஊக்குவிப்பதில் இவ்வமைப்புக்களின் பங்கு உண்டு.

மத நம்பிக்கை என்ற போர்வையிலேயே இவை அரங்கேற்றப்படுகின்றன. மதம் என்ற பெயரில் இந்நகர்வுகள் செய்யப்படுவதால் மக்கள் எதிர்த்துக்கேள்வி கேட்க முடியாதவர்களாக உள்ளனர்.

இஸ்லாமிய வரலாறு தொடர்பாகவும் சுன்னி - ஷியா பிரிவுகளின் தொடக்கம், அதன் வரலாறு பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இஸ்லாமிய வரலாறு பற்றிய இக்கலந்துரையாடல் இன்னுமொரு சமூக விஞ்ஞான வட்டக் கூட்டத்தில் விரிவாகச் செய்யப்படவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

## கவிஞர் அங்கயன் கைலாசநாதன் நினைவுப் பாடிப்பறை. - சித்திரை 2012

சித்திரை மாதத்திற்கான "பாடிப்பறை" நிகழ்வானது, போயா விடுமுறையான எதிர்வரும் 06 - 04 - 2012 வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு, நடைபெறும். இது வெள்ளவத்தையில் ரொக்சி திரையரங்கத்திற்கு நேர் எதிரே, காலிவீதியில் உள்ள ஒழுங்கையில் அமைந்துள்ள, தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெறும்.

இந்நிகழ்வின் பகுதிகளாக அமையவிருப்பன:

**"அங்கயன் கவிதைகள் ஒரு சாதாரணனின் பார்வையில்."**
**ஆய்வுரை: மு.தயாபரன்**

**மொழிபெயர்ப்புக் கவிதை:**

**மூலம் - "அது எமது எதிரியின் சவங்களை மூடும் துணி" - மு.மயூரன்**
மொழிபெயர்ப்பு - "The cloth that covers our enemies' coffins " - **தெ.மீநிலங்கோ**
: **மு.மயூரன்**

**கவியரங்கம்:**
1. "**வீழ விடுவமோ நாம்?** "
: **ஆதித்தன்**

2. "**காலக் கசையடிகள்**"
: **ஹரிசன்**

3. "**நிலமும் மக்களும்** "
: **கோ.தனுக்காந்**

"பாடிப்பறை" கவித்துறை நிகழ்வினூடாக மக்கள் கலைகள் வெளிப்படுத்தப் படுகின்றன. கவிதையும் சமூகமும் ஒன்றுசேரும் இந்நிகழ்வில், கலந்து சிறப்பிக்குமாறு, சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது.

**livestream.com/padipparai**

முகவரி மூலம் 06-04-2012 அன்று நடைபெறவுள்ள பாடிப்பறை நிகழ்வினை இணையத்தில் நேரடியாக பார்வையிடமுடியும்.

## வவுனியாவில் சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம்



நாம் வாழும் சமூகத்தைப் பற்றி ஆய்வு செய்யவும், அதை கற்றறிந்து, கலந்துரையாடிப் புரிந்து கொள்ளவும், அப்புரிதலின் மூலமாக எமது சமூகத்தை வளர்த்தெடுக்கவும். தொழில் நுட்பம், விஞ்ஞானம், சர்வதேச நடமுறை அரசியல் விடயங்கள், இயற்கை, பொருளாதார, சமூக விடயங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் தலைப்பில் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை வவுனியாவில் இல. 20, வெளி வட்ட வீதி, வவுனியா என்னும் முகவரியில் இடம்பெற உள்ளது.

அந்த வகையில் முதலாவது சமூக விஞ்ஞானக் கற்கை வட்ட கலந்துரையாடல் நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி மேற்படி முகவரியில் இடம்பெற உள்ளது. ஒரு திறந்த கலந்துரையாடல் களமாக இடம்பெறும் இக் கற்கை வட்டத்தில் அறிதல் ஆர்வமுள்ள அனைவரும் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றிப் பங்குபற்றுவதுடன், கலந்துரையாடலிலும் பங்குகொள்ள முடியும். எனவே, ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA